**எயிட்ஸ், காசநோய் மற்றும் மலேரியாவினை ஒழிப்பதற்கான உலகளாவிய நிதிய செயற்திட்டம் (ஜீஎப்ஏரீஎம்) - மலேரியா சுற்று 8 ஆவது கூறு- 2015**

எயிட்ஸ், காசநோய் மற்றும் மலேரியாவினை ஒழிப்பதற்கான உலகளாவிய நிதிய செயற்திட்டம் (ஜீஎப்ஏரீஎம்) - மலேரியா சுற்று 8 கூறின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் (ஜீஓஎஸ்எல்) எயிட்ஸ், எலும்புருக்கி நோய் மற்றும் மலேரியாவினை ஒழிப்பதற்கான உலகளாவிய நிதியத்திற்கும் இடையே 2009 செப்தெம்பர் 17 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்ட எஸ்ஆர்எல்-809-ஜீ10-எம் ஆம் இலக்க மானிய உடன்படிக்கையின் 13(பீ) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன.

## 1.2 செயற்திட்ட அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியிடல் மற்றும் செயற்திட்டக் காலம்

மானிய உடன்படிக்கையின் படி, முன்னாள் சுகாதார அமைச்சும் தற்போதைய சுகாதார போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சும் செயற்திட்டத்தின் நிறைவேற்றல் மற்றும் அமுலாக்கல் முகவராக உள்ளது. இலங்கையில் மலேரியா மீள் உருவாதலை தடுத்து மற்றும் மலேரியாவினால் ஏற்படும் இறப்புக்களை பூச்சிய நிலையில் பேணுவதன் மூலம் மலேரியாவிலிருந்து விடுவிக்கச்செய்து அதனை நிலைத்திருக்கச் செய்வதே செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். 8 ஆவது சுற்றுக்கான தீவிர மலேரியாக் கட்டுப்பாட்டுச் செயற்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுக் கிரயம் ஐ.அ.டொ. 13,059,866 ஆனதுடன் முழுத் தொகையும் எயிட்ஸ், காசநோய் மற்றும் மலேரியாவினை ஒழிப்பதற்கான உலகளாவிய நிதியத்தால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2009 ஒக்தோபர் 01 இல் தொடங்கியிருந்ததுடன் 2014 செப்தம்பர் 30 அளவில் முடிவுறுத்துவதற்கு பட்டியலிடப்பட்டுள்ளது. அதன் பின், உலக நிதியமானது செயற்திட்ட காலப்பகுதியை 2015 திசெம்பர் 31 வரை நீடித்திருந்தது.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை

பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வுசெய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வுசெய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான புத்தகங்கள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன்வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) மானியத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) மானியத்தின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்

(எ) நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஐ) நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 04 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமையவும், இந்த அறிக்கையின் பந்தி 04 இல் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்தும்,

(அ) செயற்திட்டமானது 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றனஎன்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) நிதிக்கூற்றுக்களில் வழங்கப்பட்ட தகவல்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏனைய பதிவேடுகளிலுள்ள தகவல்களுடன் இணங்கியுள்ளதா என்றும்,

(ஈ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 3 நிதிக்கூற்றுக்கள்

### 3.1 நிதிசார் செயலாற்றல்

நிதிக் கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்திட்டத்தின் செலவினம் ஐ.அ.டொலர் 1,197,959 க்கு சமமான ரூபா. 162,850,628 ஆக இருந்ததுடன், 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் ரூபா 1,505,201,277 ஆகும். மீளாய்வாண்டிற்கான செலவினம், முன்னைய ஆண்டிற்கான செலவினம் மற்றும் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பன கீழே பொழிப்பாக்கப்பட்டுள்ளன.

| வகுதி | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினம் | | | | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் |
|---|---|---|---|---|---|
| | 2015 | | 2014 | | |
| | ஐ.அ. டொலர் | ரூபா | ஐ.அ. டொலர் | ரூபா | ரூபா |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் | 149,286 | 20,293,968 | 397 | 51,975 | 207,729,971 |
| மலேரியா கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் | 1,048,673 | 142,556,660 | 1,541,272 | 201,228,501 | 1,297,471,306 |
| | 1,197,959 | 162,850,628 | 1,541,669 | 201,280,476 | 1,505,201,277 |

### 3.2 காசுப் பாய்ச்சல் கூற்று

முன்னைய ஆண்டு மற்றும் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களின்படி காசுப் பாய்ச்சல் கூற்றின் நிலைமை கீழே தரப்பட்டுள்ளது.

| **செயற்பாட்டு நடவடிக்கையிலிருந்தான காசுப்பய்ச்சல்** | **2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது** | | **2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது** | |
|---|---|---|---|---|
| | ஐ.அ.டொலர் | ரூபா | ஐ.அ. டொலர் | ரூபா |
| வெளிநாட்டு உதவி - மானியம் போன்றவற்றிலிருந்து பெறப்பட்ட காசு | 794,468 | 108,000,000 | 1,156,556 | 151,000,000 |
| வெளிநாட்டு உதவிகளுடன் தொடர்புபட்ட உள்நாட்டு நிதிகள் | 232,980 | 31,671,273 | 22,978 | 3,000,000 |
| கேள்வி வருமானத்திலிருந்து பெறப்பட்ட காசு | 331 | 45,000 | 314 | 41,000 |
| நிகழ்ச்சித்திட்ட செலவினங்களிற்காக செலுத்தப்பட்ட காசு | (1,048,673) | (142,556,660) | (1,152,291) | (150,443,193) |
| ஆண்டிற்கான மிகை / (பற்றாக்குறை) | (20,894) | (2,840,387) | 27,557 | 3,597,806 |
| சீராக்கல்கள் | | | | |
| பெறுமானத்தேய்வு | 267,173 | 36,319,519 | - | - |
| செலுத்த வேண்டியவைகளில் அதிகரிப்பு | 1,063 | 846,270 | - | - |
| பணிக்கொடைக்கான ஏற்பாடு | 8,903 | 1,210,289 | - | - |
| வெளிநாட்டு நாயணமாற்று (நட்டம்)/ இலாபம் | 3,946 | | (103) | - |
| ஆண்டின் போது செலுத்தப்பட்ட பணிக்கொடை | (1,140) | (154,943) | | |
| **செயற்பாட்டு நடவடிக்கையிலிருந்தான தேறிய காசு** | **259,051** | **35,380,748** | **27,454** | **3,597,807** |
| **முதலீட்டு நடவடிக்கையிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | | | |
| நிலையான சொத்துக்களின் கொள்வனவு | (149,286) | (20,293,968) | (397) | (51,975) |
| **முதலீட்டு நடவடிக்கைகளில் பயன்படுத்திய தேறிய காசு** | (149,286) | (20,293,968) | (397) | (51,975) |

| | | | | |
|---|---|---|---|---|
| **நிதி நடவடிக்கையிலிருந்தான காசுப்பாய்ச்சல்** | | | | |
| பொது திறைசேரியில் நிதியளிக்கப்பட்ட காசு | (109,765) | (15,086,780) | (27,057) | (3,545,832) |
| **நிதி நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்ட தேறிய காசு** | (109,765) | (15,086,780) | (27,057) | (3,545,832) |
| காசில் ஏற்பட்ட தேறிய அதிகரிப்பு / (தேறிய குறைவு) | இல்லை | இல்லை | இல்லை | இல்லை |

## 4. கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 4.1 கணக்கீட்டுக் குறைபாடு

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தின் 182 ஊழியர்களுக்கு செலுத்தவேண்டிய ரூபா 4.54 மில்லியன் தொகையான ஊழியர் சேமலாப நிதியத்திற்கான தொழில்தருநர் மற்றும் தொழிலாளர்களின் பங்களிப்பு கணக்கிற்கு எடுக்கப்படாமல் நிதிக்கூற்றுக்களில் நிகழத்தக்க பொறுப்பாக காட்டப்பட்டிருந்தது. மேலும், அதற்காக செலுத்தவேண்டிய ரூபா 2.27 மில்லியன் தொகையான மிகைக்கட்டணங்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதற்கான ஒதுக்கீட்டுக்களை மேற்கொள்வதற்கு உரிய அமைச்சிடமிருந்து அனுமதியை பெறுவதற்கு செயற்திட்டம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லையென அவதானிக்கப்பட்டது

### 4.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்களிற்கான தொடர்பு** | **இணங்காமைகள்** |
|---|---|
| (அ) நிதிப் பிரமாணங்கள் | |
| (i) நிதிப்பிரமாணம் 371 (2)(இ) 015 | பெறப்பட்ட முற்பணங்கள் அது வழங்கப்பட்ட நோக்கங்கள் பூர்த்தியடைந்த பின்னர் உடனடியாக தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்க வேண்டிய போதிலும் 187 சந்தர்ப்பங்களில் விடுவிக்கப்பட்ட ரூபா 8.63 மில்லியன் கூட்டுத்தொகையான முற்பணங்கள் 2 முதல் 10 மாதங்களிற்கு இடைப்பட்ட காலதாமதத்துடன் தீர்க்கப்பட்டிருந்தது. |

| | |
|---|---|
| (ii) நிதிப்பிரமாணம் 756 | ஐ.அ.டொலர் 457,254 க்கு சமனாக ரூபா 65.91 மில்லியன் பெறுமதியில் கொள்வனவு செய்யப்பட்ட நிலையான சொத்துக்கள் தொடர்பில் 2015 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான பௌதீக மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | செயற்திட்டத்தால் கொள்வனவு செய்யப்பட்ட கணனிகள் மற்றும் தொடர்புபட்ட மென்பொருட்கள் தொடர்பாக நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 2007 ஏப்ரல் 05 ஆம் திகதிய 33 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை பந்தி இல.4.3.2 | விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதிய திட்டத்திற்கு ஏற்கனவே பங்களித்திருந்த 05 அலுவலகர்களுக்காக 2015 ஜனவரி 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தால் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு ரூபா 330,549 தொகை அனுப்பப்பட்டிருந்தது. |
| (ஈ) 2006 இன் கொள்வனவு வழிகாட்டல் பந்தி 5.4.11 | 151 சந்தர்ப்பங்களில் செலுத்தப்பட்ட ரூபா 28.73 மில்லியன் தொகையான பெறுமதி சேர் வரிக் கொடுப்பனவுகளின் விபரங்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான பிரதியொன்றுடன் இறைவரித் திணைக்களத்தின் ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 5. நிதி மற்றும் பௌதீக செயலாற்றல்

### 5.1 நிதிகளின் பயன்பாடு

மீளாய்வாண்டிற்கான நிதிகளின் நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டிற்கான மற்றும் 2015 திசெம்பர் 31 வரை நிதிகளின் பயன்பாடு தொடர்பான முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| மூலம் | மானிய உடன்படிக்கையில் வழங்கப்பட வேண்டுமென உடன்பட்ட தொகை | | 2015 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு | ஆண்டின் போது பெறப்பட்ட நிதிகள் | | பயன்படுத்திய நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | 2015 ஆண்டின் போது | | 2015 திசெம்பர் 31 வரை | |
| | ஐ.அ. டொலர் மில் | ரூபா மில் | ஐ.அ. டொலர் மில் | ஐ.அ. டொலர் மில் | ரூபா மில் | ஐ.அ. டொலர் மில் | ரூபா மில் | ஐ.அ. டொலர் மில் | ரூபா மில் |
| ஜீஎவ்ஏரீஎம் | 13.06 | 1,498 | 2.84 | 0.79 | 108.00 | 0.71 | 95.98 | 11.03 | 1,447.19 |
| | **13.06** | **1,498** | **2.84** | **0.79** | **108.00** | **0.71** | **95.98** | **11.03** | **1,447.19** |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பொதுத் திறைசேரியால் விடுவிக்கப்பட்டிருந்த ரூபா 108 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 0.79 மில்லியன் தொகையில், மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு செயற்திட்டத்தால் ரூபா 95.98 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 0.71 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. மேலும், ரூபா 15.09 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 109,765 மில்லியன் பெறுவனவுகள் நிதி அமைச்சிற்கு மீள்நிதியிடப்பட்டிருந்தது. எனினும், 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 7.83 மில்லியன் செலுத்தவேண்டியவைகள் நிலுவையாகவிருந்தது. 2009 செப்தெம்பர் 01 ஆந் திகதியிலிருந்து 2015 திசெம்பர் 31 வரையான காலப்பகுதியில் பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட ரூபா 1,498 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 13.06 மில்லியன் தொகையில், ரூபா 1,447.19 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 11.03 மில்லியன் பெறுவனவுகள் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான பாதீட்டில் 13 நடவடிக்கைகளின் கீழ் ஒதுக்கப்பட்டிருந்த ஐ.அ.டொலர் 599,498 மில்லியன் தொகையில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த ஒதுக்கீட்டில் 03 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் ஐ.அ.டொலர் 17,692 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. மேலும், 56 நடவடிக்கைகளிற்காக மீளாய்வாண்டின் போது ஒதுக்கப்பட்ட ரூபா 741,138 கூட்டுமொத்தத் தொகை முழுமையாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) செயற்திட்டமானது உரிய அதிகாரிகளிடமிருந்து முறையான அனுமதியை பெறாமல் 03 நடவடிக்கைகளின் கீழ் வருடாந்த பாதீட்டை விஞ்சி ஐ.அ.டொலர் 3,794 மில்லியன் தொகையை செலவழித்திருந்தது. இதற்கு மேலதிகமாக, மீளாய்வாண்டிற்கான செயற்திட்டத்தின் பாதீட்டில் உள்ளடக்கப்படாத 17 நடவடிக்கைகளை அமுல்படுத்துவதற்காக மீளாய்வாண்டின் போது ஐ.அ.டொலர் 25,811 தொகை செலவழிக்கப்பட்டிருந்தது.

(ஈ) தேசிய மலேரியா கட்டுப்படுத்தல் மற்றும் தடுத்தல் மீள அறிமுகப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2014 இலிருந்து 2018 வரையான காலப்பகுதிக்கான கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. 2014 இலிருந்து செயற்திட்டத்தால் 06 வகைப்படுத்தல்களின் கீழ் 161 நடவடிக்கைகள் இனங்காணப்பட்டு அமுல்படுத்தப்பட்டிருந்த போதிலும், செயலாற்றலை அடிப்படையாகக் கொண்ட நடவடிக்கை மீதான முன்னேற்றம் 2015 திசெம்பர் 31 வரையிலும் அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை. மேலும், நடவடிக்கைகளை அமுல் படுத்தலின் மீதான கிரயம் மதிப்பிடப்பட்டு திட்டத்தில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(உ) 2014 இலிருந்து 2018 வரையான காலப்பகுதிக்கான கண்காணிப்பு மற்றும் மதிப்பாய்வு திட்டத்தின் பிரகாரம், தேசிய மலேரியா கட்டுப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் செயலாற்றல் மீதான வெளிவாரி மீளாய்வுகள் ஒழுங்கான இடைவெளிகளில் மேற்கொள்ளப்பட வேண்டும். எனினும் செயற்திட்டத்தால் அத்தகைய மீளாய்வுகள் 2013 ஆம் ஆண்டின் பின்னர் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. 2013 இல் உலக சுகாதார அமைப்பினால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசினை அமுலாக்குவதற்கு தயாரிக்கப்பட வேண்டுமென வேண்டப்பட்ட நேர எல்லை நடவடிக்கை திட்டம் மலேரியாவிற்கு எதிரான பிரச்சாரம் மற்றும் செயற்திட்ட முகாமைத்துவப் பிரிவால் 2015 திசெம்பர் 31 வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், எதிர்கால தேவைப்பாடுகளை இனங்காண்பதற்கு மேற்கொள்ளப்பட வேண்டியதாக வேண்டப்பட்ட மதிப்பீடொன்றும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 5.2 பௌதீக முன்னேற்றம்

### 5.2.1 நடமாடும் மலேரியா சிகிச்சை நிலையங்கள்

தேசிய மலேரியா கட்டுப்படுத்தல் மற்றும் தடுப்பு, மீள் - அறிமுக நிகழ்ச்சித்திட்டத்தின் 7.2 ஆம் இலக்க நடவடிக்கையின் கீழ் ஆரம்பத்திலேயே மலேரியாவினை கண்டறிதல் மற்றும் மலேரியா நோயாளிகளுக்கான முறையான சிகிச்சையளிக்கும் நோக்கங்களுக்காக 2,640 நடமாடும் மலேரியா சிகிச்சை நிலையங்களை நடாத்துவதற்கு செயற்திட்டம் திட்டமிட்டிருந்ததுடன், அதற்காக பாதீட்டில் 8.58 மில்லியன் ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும், பிராந்திய மலேரியா அலுவலர்கள் நடைபெற்ற சிகிச்கைகளின் நிலையங்களின் மாதாந்த செயலாற்றலை அறிக்கையிடுவதற்கென அறிமுகப்படுத்தப்பட்ட நியம படிவங்களை பயன்படுத்தியிருக்காத காரணத்தால் நடவடிக்கைகளின் முன்னேற்றத்தை மதிப்பிட இயலாதிருந்தது.

### 5.2.2 நீடித்து நிற்கும் பூச்சிகொல்லி சிகிச்சையளிக்கப்பட்ட வலைகளின் விநியோகம்

செயற்திட்டமானது ரூபா 499.21 மில்லியன் கிரயத்தில் 800,000 நீடித்து நிற்கும் பூச்சிகொல்லி சிகிச்சையளிக்கப்பட்ட வலைகளை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருந்ததுடன், அத்தகைய வலைகளானது பாதிக்கப்பட்ட பகுதிகளில் வாழ்கின்ற மக்களுக்கு மருந்துகளை கொடுக்காமல் அவர்களின் தனிப்பட்ட பாதுகாப்பிற்கு உச்ச மேவுகையினை வழங்குவதற்காக வழங்கப்பட்டது.

எனினும் அத்தகைய வலைகளின் செயற்திறன் மற்றும் பொருத்தமான தன்மை மலேரியாவுக்கு எதிரான பிரசுரங்களால் மதிப்பிடப்பட்டிருக்காததுடன் நலனாளிகளை தெரிவு செய்வதற்காக பின்பற்றப்பட்ட பிரமாணங்கள் தொடர்பான விபரங்கள் கணக்காய்விற்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. மேலும், விநியோகத்தின் போது பெறுநர்களுக்கு வலைகளின் பயன்பாடு மற்றும் சுத்தம் செய்வது தொடர்பான தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருக்கவில்லையென மீளாய்வு கூட்டங்களில் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. இதன் விளைவாக, விநியோகிக்கப்பட்ட வலைகள் பெறுநர்களால் முறையாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 6. நிதிக்கட்டுப்பாடுகளிலான பிரச்சினைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மாதாந்த சம்பளப்பட்டியல் முறையாக பரிசோதிக்கப்படாமையும் பொறுப்பான உத்தியோகத்தரால் அங்கீகரிக்கப்படாமை மற்றும் சம்பளமற்ற விடுமுறைக்காக முறையான பதிவுகள் இல்லாமை போன்றவற்றால் மனிதவளங்களின் கிரயத்தின் மீதான நிதிக்கட்டுப்பாடுகள் நலிவாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) செயற்திட்ட நடவடிக்கைகளுடன் தொடர்புபடாத நடவடிக்கைகளான மேலதிகநேரம், விடுமுறைக் கொடுப்பனவு மற்றும் எரிபொருள் போன்றன தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 357,444 தொகையான செலவுகள் மீள் நிதியளிக்கப்பட்டிருந்ததுடன் செயற்திட்டத்தின் செலவினமாக கருதப்பட்டிருந்தது.

(இ) செயற்திட்ட பதவியணி மற்றும் வெளித்தரப்பினர்களுக்கு வழங்கப்பட்ட முற்பணங்கள் மீதான நிதிக்கட்டுப்பாடுகள் திருப்திகரமாக அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அத்தகைய முற்பணங்கள் பொருத்தமான மதிப்பீடுகள் மீது மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக, 2015 ஆம் ஆண்டில் 85 சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 4.24 மில்லியன் கூட்டுத்தொகையான முற்பணங்களின் 34 சதவீதமான ரூபா 1.45 மில்லியன் குறித்த நோக்கத்திற்கு பயன்படுத்தாமல் மீள் நிதியிடப்பட்டிருந்தது

## 7. ஒப்பந்த நிர்வாகம்

ரூபா 1.70 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் மனித வள மென்பொருள் பொதியை கொள்வனவு செய்வதற்காக 2013 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட கேள்வி 2016 மார்ச் 31 வரையிலும் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை. இதற்காக 2013 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 1.27 மில்லியன் முற்பணம் அத்தகைய வேலைகளை பூர்த்திசெய்வதற்கோ அல்லது ஒப்பந்தங்களை நிறுத்துவதற்கோ அல்லது முற்பணங்களை அறவிடுவதற்கோ வழங்குநரை அறிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமல் 02 வருடங்களுக்கு மேலாக நிலுவையாகவிருந்தது.

**8. சர்ச்சைக்குரிய தன்மையிலான விடயங்கள்**

இலங்கையின் உலர் மற்றும் இடைநிலை வலயங்களில் அனோபிலிஸ் மூட்டைப்புழுவினை கட்டுப்படுத்துவதற்கான இலங்கை நன்நீர் மீனின் செயற்திறன் மீதான ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்காக உள்நாட்டு பல்கலைக்கழகமொன்றுடன் மலேரியாவுக்கு எதிரான பிரச்சார கூட்டம் 2011 யூனில் உடன்படிக்கையொன்றினை கைச்சாத்திட்டிருந்ததுடன் உலக நிதிய பாதீடு மற்றம் நிதி அறிக்கையிடல் வழிகாட்டல்களின் 188 மற்றும் 189 ஆம் இலக்க உறுப்புரைகளில் மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகளுக்கு முரணாக வங்கி உத்தரவாதத்தை தெரிவுசெய்வதற்கும் பெறுவதற்கும் போட்டி அடிப்படையிலான விலைமனு கோரல் செயன்முறையை பிரயோகிக்காமல் ரூபா 2.02 மில்லியன் தொகை முற்பணமாக செலுத்தப்பட்டிருந்தது. எனினும்,ஆராய்ச்சி மீதான அறிக்கை உடன்படிக்கையின் பிறகு 04 முதல் 09 மாதங்கள் வரையான காலத்தின் பின்னர் 2016 மார்ச் இல் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. மேலும், மானிய பெறுகைகளிலிருந்து ரூபா 275,000 கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட உபகரணம் உடன்படிக்கையின் 5.2 ஆம் உறுப்புரைக்கிணங்க ஆராய்ச்சி பூர்த்தியாக்கலின் பின்னர் திருத்தப்பட வேண்டியிருந்த போதும் அமுலாக்கல் முகவரிடம் கையளிக்கப்பட்டிருக்கவில்லை.